றாக இருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும், அவர்கள் விரும்பியாங்கு அதை மாற்றவும் முழுத்தத்துவமும், அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) தம்ம போதனை, தர்ம கலந்துரையாடல்கள் மற்றும் கருத்தரங்குகளை நடாத்துதல் ;

(ஆ) பௌத்த மதம் சார்பான புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், துண்டுப்பிரசுரங்கள் போன்றவற்றை அச்சிடுதலும் வெளியிடுதலும், விநியோகித்தலும் ;

(இ) நூல்நிலையம், மண்டபம், கலை அரங்கம் ஆகியவற்றை நிர்மாணித்தலும் பராமரித்தலும், பௌத்த தர்மத்தை ஆய்வு செய்தலும் மேம்படுத்தலும், பிரசாரம் செய்தலும்;

(ஈ) பௌத்த கலாசாரத்தைப் பேணியொழுகவும் அவற்றை மேம்படுத்தவும் அதற்குரிய பணிகளில் ஈடுபடுதலும் ;

(உ) பௌத்தர்களின் மத வழிபாட்டுத்தலங்களை அபிவிருத்தி செய்தலும் மத அனுஷ்டானங்களின்படி ஒழுகி நடக்கப் பயிற்சியளித்தலும், பௌத்தர்களின் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுத்தலும் ;

(ஊ) தேசிய, மத மற்றும் இனப்பாகுபாடின்றி பொருளாதாரத்தில் இன்னலுறுவோருக்கு உதவுதல் ;

(எ) பௌத்த கொள்கைக்கு அமைய சமூக சேவைகளை மேற்கொள்ள பௌத்தர்களைத் தூண்டுதல் ;

